★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 வைகாசி 7 ஷப்ப 7 இதழ் 99

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21—5—83

"யாழ் ஆஸ்பத்திரி வீதியில்

## ராணுவத்தைக் கண்டேன் சுடும் சத்தமும் கேட்டது"

### காரைநகர் இளைஞர் மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஜீப்பில் செல்லும் பெழுது வீதியின் வலதுபக்கத்தில் இராணுவ வீரர்கள் நிற்பதைக் கண்டேன். வீதியின் இடது பக்கத்தில் எவரும் இல்லை. மூன்று — நான்கு தடவைகள் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. எனது வலது பாதத்தில் ஒரு காயம் ஏற்பட்டதாக உணர்ந்தேன்.''

இவ்வாறு மரணமான காரைநகரைச்சேர்ந்த இரத்தினசிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா (25 வயது) என்பவரின் மரண விசாரணையில் காரைநகர் கடற்படை வீரர் வதலாகலகே ரஞ்சித் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பதில் நீதவான் வைகரத்தினம் கேசவன் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடாத்தினர்.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் ரி. மனோகரன் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

கடந்த 18ம் திகதி இரவு இரத்தக்காயங்களுடன் ஸ்ரீஸ்கந்தராஜாவின் சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

யாழ். மருத்துவ பீடபேராசிரியரும் பதில் சட்டவைத்திய அதிகாரியுமான என் சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை செய்தார்.

இறந்தவருடன் கூட இருந்தவரது நண்பரான கிருஷ்ணபிள்ளை நவரத்தினம் (32வயது)

[6-ம் பக்கம் பார்க்க]

# தமிழ்பகுதியிலிருந்து ராணுவம் உடன் வாபஸ்பெறவேண்டும்!

## சிவா - அமிர் கூட்டறிக்கை

(யாழ்ப்பாணம்)

வியட்னாமில் அமெரிக்கா நடந்துகொண்டது போல், இங்கு செயல்படும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம் தமிழ்மக்களை ஆட்சி புரியும் அரசாங்கத்தின் கொள்கையை முற்றாகச் சீர்தூக்கிப் பார்க்கவும், முழுப் பிரச்னைக்கும் அரசியல்தீர்வு காணவும் அவசியமான ஒரு கட்டம் உருவாகிவிட்டது. தமிழ் பகுதிகளில் இராணுவம் இருப்பது மக்களின் உணர்ச்சிகளை மேலும் அதிகரிக்கச் செய்யும். இப்பகுதியிலிருந்து ராணுவம் எவ்வளவு விரைவாக வாபஸ் பெறப்படுகிறதோ, அவ்வளவு த்மிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் நன்மையாக முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம்.சிவசிதம்பரமும், செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.


யாழ்ப்பாணத்தில் நடந்தின்ன சம்பவங்கள் தொடர்பாக விடுத்துள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது!

''கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் நடந்துவரும் சம்பவங்கள், 1977லிருந்து நடைபெற்றுவரும் சம்பவங்களின் தொடர்ச்சியாகத் தெரிகிறது

1977ல் யாழ் நகரிலிருந்து பத்துமைல்களுக்கப்பால் உள்ள புத்தூரில் நடந்த சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கையில் காயம் ஏற்பட்டது இதைத்தொடர்ந்து யாழ். பொலிசார் யாழ் பெரியகடைக்குத் தீவைத்தார்கள். முழுநாட்டிலும் தமிழர்களுக்கெதிராக வன்செயல்கள் இடம்பெற்றன

1981மேமாதத்தில் நாச்சிமார் கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் இரு பொலிசார் சுடப்பட்டனர் இதைத்தொடர்ந்து தமிழர் விடுதலைக்கூட்டணித்

[6-ம் பக்கம் பார்க்க]



கந்தர்மடத்தில் உடமைகளை இழந்து பரிதவிக்கும் குடும்பங்களில் ஒன்று.

### யாழ். நகர் சம்பவங்கள்:

## விசாரிக்க ஏ. எஸ். பி. மஜீத் தலைமையில் குழு

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை யாழ் கந்தர்மடத்திலும், யாழ் நகரிலும் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு உதவி பொலிஸ் அதிபர் ஜனாப் மஜீத் தலைமையில் 12 பேர் கொண்ட குழு வொன்றை பொலிஸ் மா அதிபர் திரு ருத்ரராஜசிங்கம் நியமித்துள்ளார்.

இக்குழுவினர் வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து அவர்களின் வாக்கு மூலங்களைப்பதிவு செய்யவுள்ளனர்.

இக்குழு யாழ் வன்செயல் சம்பவங்கள் பற்றிய அறிக்கையை வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர் பி ராஜதுரையிடம் சமர்ப்பிக்கும் அவர் இவ்வறிக்கையை பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கத்திற்கு அனுப்பி வைப்பார்

## கந்தர்மட அகதிகளுக்கு கைகொடுக்கிறது யாழ். லயன்ஸ்!

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடப்பகுதியில் நடைபெற்ற வன்முறைச்சம்பவத்தால் வீடுகளையும்—உடமைகளையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கும் அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கக் கைகொடுத்துதவ யாழ். லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது

இதற்கென 'கந்தர்மடம் அகதிகள்புனர்வாழ்வுநிதி' ஒன்றை யாழ் லயன்ஸ் கழகம் ஆரம்பித்துள்ளதுடன் இந்த நிதிக்கு யாழ்; லயன்ஸ் கழகம் பத்தாயிரம் ரூபாவை ஆரம்ப நிதியாக வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ். லயன்ஸ்கழகப் பிரமுகர்கள் கூட்டமொன்றில் கந்தர்மட அகதிகளுக்கு புனர்வாழ்வளிப்பதென முடிவு செய்யப்பட்டது

லயன் டாக்டர் என் சரவணபவானந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அகதிகளாகியுள்ள கந்தர்மடம் பகுதி மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் உடனடியாக வழங்கவேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அப்பியா

(6ம் பக்கம் பார்க்க)

## பேராதனை மாணவர் நிலை; இன்று ஆலோசனைக்கூட்டம்

யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களையடுத்து, அங்கிருந்து வெளியேறிய தமிழ் மாணவர்களின் நிலைமைகள் பற்றி ஆராய யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

தமிழ் மாணவர்களின் பாதுகாப்பு, அவர்கள் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு திரும்புதல் தொடர்பான விடயங்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்தில் பேராதனை, கொழும்பு, மொறட்டுவ மற்றும் பல்கலைக்கழகங்களின் மாணவர் அவை தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்

(வ)

## பதட்டநிலையை பக்குவமாகத் தீர்த்தார்!

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நேற்று தமிழ் மாணவரொருவருக்கும், சிங்களமாணவரொருவருக்குமிடையே தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட தகராறு ஒன்று இன ரீதியில் விஸ்தரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபோதிலும் துணைவேந்தரின் முயற்சியால்

[6ம் பக்கம் பார்க்க]

## 36 பேர் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பகுதியில் நடைபெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பாக யாழ் பொலிசில் நேற்று 36 பேர் முறைப்பாடு செய்துள்ளனர்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொலிஸ் உயர்மட்ட மகாநாட்டில் எடுத்துக்கொண்ட முடிவின்படி, யாழ் பொலிஸ் தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடாத்தினர்

தொடர்ந்து முழுவிசாரணையும் நடாத்தி முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட பின்னர் பூர்வாங்க அறிக்கையொன்று பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப் பட்டது.

(மா)

## நேற்று மாலை திடீர் பதட்டநிலை பருத்தித்துறையில் அட்டகாசம்!

(புலோலி)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்று மாலை நான்கு மணிக்கு திடீர் பதட்டநிலை ஏற்பட்டது! வாகனமொன்றில் இங்குடையில் வந்தவர்கள் பஸ்நிலையப் பகுதியில் சிறிது நேரம் நடாத்திய அட்டகாசமே இந்த அமளி துமளி நிலைக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது

அங்கு நின்ற இளைஞர்கள் சிலருக்கு அடித்ததையும் தாக்கியதையும் தொடர்ந்து பஸ்ஸுக்காக காத்துநின்றவர்கள் நாலாபக்கமும் கால்போனபோக்கில் சிதறி ஓடினார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தட்டாதெருச் சந்திக்கு சமீபமாக 1 3/4 பரப்புடன் சகல வசதிகளும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T. கிருஷ்ணசாமி, 95/12, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 7284

ஜப்பான் மோட்டார் வாகனங்களுக்கென இறக்குமதி செய்யப்பட்ட "Fram" Filter Elements மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஈச்சி 19/3 பாமெணடை ரோட், நுகேகொடை. 7283

கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலுக்கு அருகில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு இரண்டு பக்க ரோட்டு பாதையுடன் ஒவ்வொரு பரப்பாகவும் கொடுக்கப்படும் பீ. பேரின்பம், ஆனந்தன் வடலி ரோட், கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலடி. 7307

கொழும்புத்துறையில் மகாவித்தியாலயம், கோவில், லோசர் ஆச்சிரமம் ஆகியவற்றிற்கு அருகாமையில் இரண்டுபரப்பு துண்டுக்காணிகள் விற்பனைக்குண்டு. மேலும் விபரங்கட்கு. 106 கொழும்புத்துறை வீதி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். 7305

## பயிற்சி

மோட்டார் மெக்கானிஷம்- எலக்றிக்கல் பயிற்சிகள் 01-06-83 ஆரம்பம். இன்ஸ்ரிரியூட் ஓவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொரம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7292

## விற்பனைக்கு

புதிய 86ஸ்ரீ வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு S. நடராசா O. A. ஞானவைரவர் கோவில் ஒழுங்கை, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 7286

**ST. PATRICK'S COLLEGE JAFFNA**
**PRIZE - GIVING POSTPONED**

Regret any Inconvenience. fresh date will be notified later. Rector

7303

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை

பின்வரும் பதவிக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாண் தயாரிப்பாளர் (BAKERS)- வெற்றிடங்கள் 2

வயதெல்லை:
1-06-83 ஆந் திகதியன்று 18வயதிற்கு குறையாதவராயும் 55 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்;
அரச கூலி நிர்ணயசபைச் சட்டத்திற்கமைய வழங்கப்படும்.

அனுபவம்:
குறைந்தது 2வருடம் பாண் தயாரிப்பாளராக பணிபுரிந்திருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:
01-06-1983

விண்ணப்பிக்க விரும்புவோர் கடித மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

19-05-1983 7306

## இன்றைய பலன்

வைகாசி 7-ம் திகதி
சனிக்கிழமை
(21-5-83)

**மேடம்:** கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை, காதலர்கள் எண்ணங்கள் கைகூடும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும், கடமையாற்றுமிடத்தில் பெரியவர்களின் ஒத்துழைப்பு பெருகும்.

**இடபம்:** துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள், கலைஞருக்கு பொதுசனத்தொடர்பு யும் கிடைக்கலாம், விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு, மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

**மிதுனம்:** வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும், சுற்றுடலின் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும், அதிகவருவாய்க்கு இடமுண்டு, புதுமையான சம்பவங்கள் இடம்பெறும். விருந்தினர்கள் வருகை மகிழ்ச்சியைத்தரும்.

**கடகம்:** கருடப்பார்வை உம்மை வட்டமிடும், எதிர்பாராத வகையில் பொருட்செலவுக்கு இடமுண்டு, தொழில்துறையில் சிறிது மனக்கசப்புத்தென்படலாம், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்.

**சிங்கம்;** இனப்பூசலின்மூலம் இதயபாரம் ஏற்படும், திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையைச் சமாளிக்கமுடியும், சுமாரான தினம்.

**கன்னி:** போதுமென்றமனத்துடன் இருப்பீர்கள், எதிலும் நிறைவு தென்படும். முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும், குடும்பத்திலும் அன்புதவழும், கனிவான நினைவுகளில் மூழ்கிக்கொள்வீர்.

**துலாம்:** தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண் துடைப்பு வேலைகளும் நடக்கும், எதிலும் கவனம் செலுத்தவும், பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பெருமையைப் பேணி நடக்கவும்.

**விருச்சிகம்:** பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம், மனப்போல் யாவும் நடக்கும், கல்வியில் சிறப்பும் வாகனச் சிறப்பும் உண்டு.

**தனு:** காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார். உங்கள் சிறிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும், தானதருமங்களில் விருப்பம் மேலிடும்.

**மகரம்:** நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும், நண்பர் ஒருவர் உமது காலை வாரி விடுவதற்கு முயற்சி எடுக்கலாம், செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

**கும்பம்:** வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும், காதல் வட்டாரங்களில் கலகலப்பு தென்படும், இல்லத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும், நாடகக் கலைஞர்களுக்கு இன்று வெற்றித் தினம்.

**மீனம்:** தமது குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம், வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும், கலைச்செய்திக்கு இடமுண்டு, தொழிலில் முன்னேற்றம் தடைப்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## அளவெட்டியில் சௌந்தரராஜன் மகன் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவிலின் 7-ம் திருவிழாவாகிய நாளை ஞாயிற்றுக் கிழமை பிரபல பின்னணிப் பாடகர் ரி. எம். சௌந்தரராஜனின் புதல்வன் செல்வக்குமாரின் மெல்லிசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. அன்றிரவு விசேட மேளக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளது.


**ICMA Section A**

தவிர்க்கமுடியாத காரணங்களால் 23-05-83-ல் ஆரம்பமாகவிருந்த மேற்படி வகுப்பு 30-05-83-க்குப் பின்போடப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை முன்பு அறிவித்ததன்படி 28-05-83-ல் நடைபெறும்.

**Cantabia Institute**
21. Main Street Jaffna
Telephone: 24201


## வடபிராந்திய போக்குவரத்துச் சபை சுற்றுலா விடுதியில் வீட்டுத் தளபாடங்கள் பொருட்கள்

## ஏல விற்பனைக்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் — கொழும்புத்துறை வீதி, பீச் ரோட்டில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, மின்சார உபகரணங்கள் உட்படப் பல பெறுமதிமிக்க சாமான்கள் பகிரங்க ஏலத்தில் 28-5-83-ந் திகதியன்று காலை 9 மணிமுதல் விற்பனை செய்யப்படும்.

பொருட்களைக் கொள்வனவுசெய்வோர் முழுத் தொகையையும் உடன் செலுத்தி பொருட்களை மாலை 3 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தவேண்டும்.

நுழைவுப்பணமாக ஒருவர் ரூபா. 25/- செலுத்த வேண்டும். பொருட்களை 25-5-83-ந் திகதி காலை 9 மணிமுதல் மாலை 4மணிவரை பார்வையிடலாம்.

மேலதிக விபரங்கட்கு:

க. தனபாலசிங்கம்,
பொதுசனத் தொடர்பு அதிகாரி,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
இல: 165, 4- ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல: 22114, 22115, 23851.


சி. கனகரத்தினம்
தலைவர்,
தகவுடை அதிகாரி,
வட பிரதேச போக்குவரத்துச் சபை,
யாழ்ப்பாணம். [7249]


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக வேலைவாய்ப்பை பெற்றுத்தரும்
DIPLOMA IN
**HOTEL MANAGEMENT AND TOURISM**
(Course in 3 Months)
* முழுக்கட்டணமும் 950/- மட்டுமே
* பிரஞ்சு, ஜெர்மன் மொழியும் போதிக்கப்படும்
* சிறந்த முறையில் செய்முறையுடன் போதிக்கப்படும்.

ஆரம்பம்: 22-5-83

விபரங்கட்கு:
**DARMANANDA INSTITUTES**
250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
T P 24011





சென்னை-ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க
தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு....

வீனஸ் நியூவீனஸ்

ரி-வி., ரேடியோ உத்தரவாதத்துடன் மணிக்கூடுகளை பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி.வி, ரேடியோ, மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை பதிவு செய்துகொள்ளவும்

மற்றும் மங்களவைபவங்களை வீடியோவில் படம்பிடித்துக் கொள்ளவும்

மேலும் யாழ்.நகரில் உத்தரவாதத்துடன் ரி-வி ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் தியேட்டர் அருகில் யாழ்ப்பாணம்

நியூ வீனஸ் 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்





யாழ். மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

இன்றே உங்கள் பிரயாண சீட்டுகளை யாழ். நகரிலேயே பதிவுசெய்ய நாடுங்கள் 'குறொஸ் ட்ரவல் சேவிஸ் (பிறைவேற்) லிமிட்டெட்' ஸ்தாபனத்தை.

(1) கொலன்ட் வழியாக இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள், கனடா, ஜேர்மனி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான பிரயாண சீட்டுகள்.
2) பிரயாணிகள் காசோலை, VISA (விசா) (3) விசா, (VISA) மற்றும் சகல பிரயாண ஒழுங்குகளுக்கும். பிரயாண அனுபவமிக்கவர்களின் இலவச ஆலோசனைகட்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள் எங்கள் குளிரூட்டப்பட்ட அலுவலகத்தை. நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி!

**CROSS TRAVEL SERVICE (P.T.E.) LTD.**

நவீன சந்தை, 2ம் கட்டிடம், 5, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22040, 22065. (7293)

## மணிவாக்கு

பக்தன் ஒருவன் செய்யக்கூடிய உயரிய வழிபாடு நடமாடும் தெய்வங்களை வழிபடுதலே ஆகும். ஆறு அல்லது பன்னிரண்டு ஏழை மக்களை உங்கள் இல்லத்துக்கு அழைத்துவந்து தத்தம் சக்திக்கு இயைய அவர்களை உபசரியுங்கள். நாராயணர்களாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்யுங்கள்.

சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## நல்வாழ்வு நல்கும் அரசு

இந்திய யாத்திரையில் சிதம்பரம் போகிறவர்களுக்கு யாழ்ப்பாணம் இலங்கையின் புலியூர் என்பது எளிதில் புலப்படும்.

இந்தப் பெருமைக்குப் பொறுப்பான பெரியோர்கள் சைவ உலகில் மட்டுமல்ல இலங்கைச்சரித்திரத்திலேயே பெருமிடம் பெற்றவர்கள்; ஏன் உலக சரித்திரம் என்றும் என்ன?

'சிவநடனம்' (Dance of Shiva) என்ற உலகப் புகழ் பெற்ற நூலை எழுதியவர் யாழ்ப்பாணத்துக்குரித்தான கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி என்பது உலகவரலாற்றுக்குரிய விடயம்.

இன்று இப்புலியூர் 'புலியூர்' என்ற ஏளனத்துக்காளாகியதோடு, பலமுறை தீவைக்கப் பட்டிருக்கிறது.

1958ல் நடைபெற்ற இனக்கலவரத்துடன் ஆரம்பமான கொடுமைகள் இன்றுவரைக்கும் இப்பகுதிகளை—குறிப்பாக யாழ். நகர மக்களைக் காலத்துக்குக் காலம் அகதிகளாக்கிவிட்டன.

இப்பழமையான நகரத்தில் சைவப் பண்புக்குப் பெயர் பெற்ற இடம் கந்தர்மடம்; இங்குள்ள பழம் ரோட்டில் நடைபெற்ற ராணுவக் கொடுமைகள். பொதுவாக நகரத்தின் நிர்க்கதி நிலைமையின் உச்சத்தைக் காட்டுகின்றன.

25 வருடமாக இந்நாட்டை ஆண்டுவரும் ஆட்சிகள்; இத்தன்பிலக் கொடரி நாடகத்திற்குத் தூபமிட்டுவருகின்றனவே அல்லாது; அதனை முடிவு கட்டமுடியவில்லை.

ஆட்சி முறை குடியாட்சி என்பது பேச்சு. ஆனல் குடியாட்சி எவ்வாறு செயற்படுகின்றதென்பது பற்றி தமிழ்மக்களைப் பொறுத்தளவில் இன்றைய கட்டத்தில் அதிக வேற்றுமையில்லை இடமிராது.

தமிழ் சிங்களமென்ற வேறுபாடில்லாத வாழ்வில் ஆரம்பமானசுதந்திரவாழ்வு இன்று எங்கேபோய்ச்சேர்ந்திருக்கிறதென்பது உலகளாவிய விடயம்.

மக்கள் நல்வாழ்வுக்கு உதவுவது மக்கள் ஆட்சியின் முதற்பொறுப்பு. அது பொதுஉடைமைக் கொள்கையா அல்லது தனிஉடைமைக்கொள்கையா என்பது பற்றிய கருத்துப்போராட்டம். அது உருவாக்கும் உலகப்போர் இன்று உலகனைத்தையும் போர்க்கோலத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

இலங்கையில் இந்தப் போருக்கு இடமில்லையென்றளவில் ஆளுங்கட்சிக்கு கடந்த இடைத்தேர்தலிலே அமோக வெற்றி கிடைத்திருக்கிறது.

தனி உடைமைக்கொள்கைக்குத் தலைமை பூண்டுள்ள ஜனதிபதி ஜெயவர்த்தனவின் அரசு ஒரு சில மணித்தியாலங்களுக்குள் இந்தக் கந்தர்மட மக்களின் வீடுகள், உடைமைகள் அழிக்கவும், மக்கள் பீதியடைந்த நிலையில் அகதிகளாக (ஆகுமற்ற, எதுவுமற்ற அவலநிலைக்குப் பொறுப்பானது எவ்வாறு?

தீவைத்தலும், உயிர்களின் உடைமைகள் அழிப்பதும், அதற்குப் பின் அமைதி நிலைநாட்ட அதிகாரிகள் விரைவதும், மாநாடு கூட்டுவதும் மிகப் பழைய, பல்லு விழுந்த நடவடிக்கைகள்.

நாம் முழு அதிகாரம் பெற்றிருக்கின்றோம் என்ற அகங்காரம், 'எல்லாம் இந்த அரசே' என்ற நோய் பீடிக்க இடமுண்டு.

ஆனல் நாடு முழுவதிலும் யாழ்ப்பாணம்தானே குலத்தின் கோடரிக்காம்பு?

புதன்கிழமை காலை ஆறுமணி தொடக்கம் வியாழக்கிழமை காலை ஆறு மணி வரைக்கும் நாடளாவிய நிலும் நடந்த தேர்தல் வன்செயல்கள் தொகை 191. இவற்றின் முழு விபரங்கள் தெரியாத போதிலும் இச்சிறு இடைத்தேர்தலில் இவ்வளவு குழப்பங்கள் நடைபெறுமானல், இதற்கு யார் பொறுப்பானலும் நாட்டின் அமைதியைக் கட்டிக்காக்கும் ஆற்றல் குன்றிவருவதைக் குறிக்கிறது.

தேர்தலுக்கு முன்னும், பின்னும் அவசரகாலம் அவசியமென்பது இதனை நிரூபிக்கின்றது.

சிங்கள ஆட்சியா தமிழ் ஆட்சியா, முதலாளித்துவமா, கம்யூனிசமா, இடதா வலதா என்பதல்ல கேள்வி.

எவ்வித ஆட்சியிலும் மக்கள் நல்வாழ்வுக்கு அரசு உறுதியளிக்கவேண்டும்.

அந்த நிலைகடந்து உயிர் உடைமைக்குப் பாதுகாப்பளிக்கத் தவறுவதோடு, அவற்றின் அழிவுக்கே ஆதரவளிக்கும் நிலை மிக மிகத் துன்பமானதே! கட்டுப்பாடு, கண்டிப்பு, ஒழுங்கு என்ற பண்புகள் ஆட்சியிலிருந்து மக்களுக்கு ஊற்றெடுக்கவேண்டும்.

நிலைமையின் அடிப்படை விவகாரங்களை அனுபவமற்றத் தலைவர்கள் பழைய வழியில் போவது எவ்வித பயனுமளிக்காது.

அடிக்கடி பாதிப்புக்குள்ளான தமிழ் மக்கள் அடிப்படை அரசியல் தீர்வுகாண்பதற்குத் தலைவர்களைத் தீவிரமாக நிர்ப்பந்தப்படுத்தவேண்டிய நிலைமுற்றிவிட்டது.

## முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை நினைவு முத்திரை வெளியீட்டு நாளை 22-ந் திகதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு திட்டமிட்டபடி நடைபெறும். ஆனல் அன்றைய தினம் மாலையில் நடைபெறுவதாக இருந்த கூட்டமும் விழாவும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## பனைவள ஆய்வு நிலையம் அமைக்க

# ஐ. நா. நிறுவனம் 2,64,800 டாலர் வழங்கும்

இலங்கையின் பனம் கைத்தொழிலையும் பனம் பொருள் அபிவிருத்திச்சபையையும் கூடுதலான உதவிகளை வழங்கி ஊக்குவிப்பதற்கு ஐக்கியநாடுகள் சபை அபிவிருத்தித்திட்ட உலக உணவு விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது.

ஐ. நா. சபையின் உலக உணவு விவசாய நிறுவனம் இந்த ஊக்குவிப்பு உதவித்திட்டத்தின் கீழ் 2,64,800 அமெரிக்க டொலர்களை வழங்க முடிவுசெய்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட மூன்றுவது நாடுகள் அமைப்பின்கீழ் இந்த நிதி வழங்கப்படும்.

கடந்த பெப்ரவரி மாதம் யாழ் நகரில் ஐ. நா. சபையின் உலக உணவு விவசாய நிறுவனமும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து ஐந்து நாட்கள் நடாத்திய சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்காகவே 264,800 அமெரிக்க டொலர்களும் செலவிடப்படும்.

### நான்கு அம்ச ஆய்வு

இத்தேசிய பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் பனம் பயிர் உற்பத்தி, பயிர்ம் பாதுகாப்பு, பதனிடுதலும், சந்தைப்படுத்துதலும் ஆகிய நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டதாக ஆய்வுகளை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு பனம் பொருள் அபிவிருத்திச்சபையுடன் இணைந்து அமுல்நடத்துகிறது. பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நேரடிப்பொறுப்பிலேயே இத்தேசிய பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் நிறுவும் திட்டம் செயற்படும்.

### அடுத்த ஆண்டு ஆரம்பம்

பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரே இத்திட்டத்தின் இணைப்பாளராகக் கடமையாற்றுவார் என்றும், இத்திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1985ம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டுவிடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கிராமிய யுவதிகளும், இளைஞர்களும் அதிக அளவில் பனங் கைப்பணிப் பொருட்கள், பதநீர், பனந்தும்பு பனம் பழம் ஆகியவற்றிலான உற்பத்திகளில் ஈடுபடுவதும், அவற்றைச் சந்தைப்படுத்துவதும் இந்நிறுவனத்தின் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். இதனுல் தொழிற்துறை அபிவிருத்தி வேலை வாய்ப்புக்கள் ஏற்படுவதினுலும், மேலதிக வருமானம் ஈட்ட முடிவதினுலும் கிராமியப் பொருளாதாரத்திற்கு இத்திட்டம் பெரும் பங்கை ஈட்டிக்கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பனம் பொருள் அபிவிருத்தியில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும்கொண்ட பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை ஐ. நா. உணவு விவசாய நிறுவனத்தின் இந்த நிதியுதவியை மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கின்றார். (அ)

- ஏ. என். எஸ். திருச்செல்வம் -

# மக்கள் கருத்து

## உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தத் தீர்மானம்

மேற்படி தலைப்பின் கீழ் தங்கள் 12-5-83-ந் திகதிய பத்திரிகையில் 6-ம் பக்கத்தில் பிரசுரமான செய்தி சம்பந்தமாகக் கீழ்க்காணும் விபரங்களைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த உபஅலுவலகத்திற்குச் சொந்தமான நீர்விநியோக வாகனத்தைத் திருத்துவதற்காகப் பல மாதங்களுக்கு முன்பு புத்தூரில் உள்ளபெருந்தெருக்கள் திணைக்கள இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பியிருந்தேன். எமது உழவு இயந்திரம் திருத்திய சகல கொடுப்பனவுகளும் செய்யப்பட்ட பின்பே திருத்த வேலை ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்த காரணத்தினுல் இது குறித்து யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபைத் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதற்கிணங்க இக்கொடுப்பனவில் பெரும் பகுதி செலுத்தப்பட்டிருந்தது.

இவ்வேளையிலேயே தாங்கள் பத்திரிகையில் குறிப்பிட்ட வலிகாமம் வடபிரதேசச் சபைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மேற்காட்டிய தீர்மானம் நிறைவேற்றப் படும்போது அக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த யான் நிலைமையை அங்கத்தவர்களுக்குத் தெளிவு படுத்தியிருந்ததோடு வேலைப்பகுதி பிரதிச் செயலாளருடன் தொடர்பு கொண்டு எஞ்சியுள்ள சிறு தொகைக்குரிய கொடுப்பனவையும் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் இது குறித்து மீண்டும் தொடர்பு கொண்டு ஒரு வார கால அவகாசத்துக்குள் சகல கொடுப்பனவுகளையும் செய்வதாகவும் அதுவரைக்கும் இத்தீர்மானம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டாமெனவும் கேட்டுக் கொண்டேன். சபை இதனை ஏற்றுக்கொண்டது.

இதற்கேற்ப யான் நடவடிக்கை எடுத்துச் சகல கொடுப்பனவுகளையும் செய்து நீர் விநியோக வாகனத்தை பெருந்தெருக்கள் திணைக்களத்தினர் மூலம் திருத்துவதற்கு சகல ஒழுங்குகளையும் செய்துள்ளேன்.

க. சண்முகநாதன்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உபஅலுவலகம், காங்கேசன்துறை.

## சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம்

# வலுவற்று இருப்பதாக சுட்டிக்காட்டினர்

(அரியாலை)

அரசாங்கத்தால் 1957-ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் வலுவற்றதாக இருப்பதாக அறவழிப் போராட்டக்குழு யாழ் அரசாங்க அதிபரை நேரில் கண்டு பேசிய பொழுது சுட்டிக் காட்டியது.

இந்தச் சட்டத்தில் என்ன திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதைத் தயாரித்து தம்மிடம் சமர்ப்பிக்கும்படி யாழ் அரசாங்க அதிபர் தூதுக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சட்டத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்ய ஆலோசனை கூறுவதற்கு இளைப்பாறிய நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான திரு. எ. ஜெயக்கொடி, சட்டத்தரணி திரு. கி. பொன்னையா, சட்டத்தரணி திரு ஐ எவ். சேவியர் ஆகியோர்களைக் கொண்ட சட்டத்தரணிகுழு ஒன்று அறவழிப் போராட்டக்குழுவினுல் நியமிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலிருக்கும் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் என்ன என்ன திருத்தங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதை எழுத்து மூலம் அறிவிக்கும்படி அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் பல சமூக சேவை ஸ்தாபனங்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## சுழிபுரம் பகுதியில்

# 7 டாக்டர்கள் குழு தொழுநோய் பரிசோதனை

(பண்டத்தரிப்பு)

இலங்கை தொழுநோய் தடுப்புச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஏழு டாக்டர்கள் அடங்கியகுழு ஒன்று தொழுநோய் பரவியுள்ள சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலும் அதனை அடுத்துள்ள பாண்டுவெட்டை, வறுத்தோலை, குடாக்கனை ஆகிய பகுதிகளிலும் விரிந்த அளவிலான பரிசோதனை ஒன்றை கடந்தவாரம் நடாத்தியது.

சுமார் 800 க்கும் மேற்பட்டவர்களை பரிசோதித்த போது சிலருக்கு புதிதாக தொழுநோயின் ஆரம்பவறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து தீவிர வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை சேர்ந்த வைத்திய கலாநிதி என். சிவராஜா தலைமையில் இப்பரிசோதனை நடைபெற்றது.

## லெபனன் - இஸ்ரேல் ஒப்பந்தம்:

# சவுதிஅரேபியா லெபனனை ஆதரிக்க முடிவு!

## இஸ்ரேலுக்கு 'எப்-16' அமெரிக்க போர் விமானங்கள்

கைதவ், மே, 20

அந்நியத் துருப்புகளை லெபனானிலிருந்து வெளியேற்றும் அமெரிக்கத் திட்டத்தை இஸ்ரேலுடன் இணைந்து லெபனான் ஏற்றுக்கொண்டதை சவூதி அரேபியா ஆதரிக்க முன்வந்துள்ளது.

ஆறு மத்திய கிழக்கு ஒத்துழைப்பு நாடுகள் லெபனான் அமெரிக்கத் திட்டத்தை ஆதரித்தது குறித்து அரபு சவூதி அரேபியாவில் கூடின. அக்கூட்டத்திலேயே சவூதி அரேபியா லெபனானின் முடிவை ஆதரிக்க முன்வந்தது.

அமெரிக்காவின் திட்டத்திற்கமைய இஸ்ரேலுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள லெபனான், ஏனைய அரபு நாடுகளின் கோரிக்கைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்று சவூதிஅரேபியா கேட்டுள்ளது.

இத்துடன் சிரியாவுக்கும், லெபனானுக்குமிடையே எந்தக் கட்டத்திலும் பிளவு ஏற்படக் கூடாதெனவும் சவூதி வலியுறுத்துகின்றது.

சவூதிஅரேபியாவில் கூடிய ஆறு மத்திய கிழக்கு ஒத்துழைப்பு நாடுகள் ஈரான்-ஈராக் மோதலைப்பற்றியும் ஆராய்ந்தன. ஈரான்-ஈராக் ஆகியனவற்றின் மோதலைத் தவிர்க்கச் செய்யும் வகையில் சமரச தூதுக்குழுவொன்றை அனுப்புவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பஹ்ரெய்ன் வெளிநாட்டமைச்சர் வலீ குடாம் போரை முடிவுக்குக் கொண்டுவர இத்தூதுக் குழுவுடன் மேலும் சமாதானத் தூதுவர்களையும் மத்திய கிழக்கிற்கு ஒத்துழைப்பு நாடுகள் அனுப்புமென்று கூறினார்.

இது இவ்வாறிருக்க, இஸ்ரேலுக்கு நவீன எவ்-17 ரக போர் விமானங்களை விற்பனைசெய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது.

கடந்த ஆண்டு லெபனானில் இஸ்ரேல் நடத்திய ஊடுருவலையடுத்து இஸ்ரேலுக்கு இராணுவத் தளபாடங்களை விநியோகிப்பதை அமெரிக்கா நிறுத்தியிருந்தது. ஆனால் தற்போது இத்தடையைத் தளர்த்தி எவ்-16 ரக விமானங்களை இஸ்ரேலுக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இத்தகவலை வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அதிபர் றீகன் இஸ்ரேலுக்கு எவ்-16 ரக விமானங்களை வழங்குவதுபற்றி இஸ்ரேல் லெபனானுடன் இணைந்து அமெரிக்கத் திட்டத்தை ஆதரித்ததன் பின்னரே முடிவு செய்தார். [கி]

---

காஷ்மீர்

## இந்திராகாங்கிரஸ் மாகாண அலுவலகத்துக்கு தீவைப்பு!

### பல்வேறு கட்சித்தலைவர்கள்கண்டனம்

புதுடில்லி மே. 20

காஷ்மீரில் இந்திரா காங்கிரஸ்கட்சி மாகாண அலுவலகம் தீ வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து புதுடில்லியில் பல்வேறு கட்சித் தலைவர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீர் இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும், காஷ்மீர் தேசிய மகாநாட்டுக் கட்சி ஆதரவாளர்களுக்குமிடையே நடந்த மோதலையடுத்தே இத் தீவைப்பு இடம்பெற்றது.

ஜனதாக்கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமி வெளியிட்டுள்ள கண்டனத்தில் ஜனநாயகரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் வன்முறைகள் தலைதூக்காதவாறு பார்த்துக்கொள்ளும்படி காஷ்மீர் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லாவைக் கேட்டுக்கொண்டார்.

இத்தீவைப்புச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது: காஷ்மீர் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் அங்குள்ள மேற்படி கட்சியின் மாகாண அலுவலகத்துக்கு முன்னால் நின்று தமது கட்சிக்கொடியை ஏற்ற முனைந்துள்ளனர். இதேவேளை இங்கு குழுமிய கூட்டத்தின் மத்தியில் நின்ற சில விஷமிகள் இக்கட்சியினரின் கோஷத்துக்கெதிராக எதிர்க்கோஷம் எழுப்பினர். இதனைத் தொடர்ந்து இரு சாராருக்குமிடையே கைக்கலப்பு ஆரம்பித்தது.

இந்திரா காங்கிரஸ் கட்சியினர் இக்கைக்கலப்பையடுத்து தமது மாகாணக்கட்சி அலுவலகத்தினுள் நுழையலானார்கள். பின்னர் இந்த அலுவலகத்தினுள்ளிருந்து வெளியே நின்ற கலகக்காரர்கள்மீது இவர்கள் கற்களை வீசினராம். இதனையடுத்தே வெளியே நின்ற தேசிய மகாநாட்டுக்கட்சியினர் என்று தம்மைக்கூறிக் கொண்டவர்கள் அக்கட்டிடத்திற்குத் தீவைத்தனராம்.

தீவிபத்து ஏற்பட்ட சிறிது நேரத்தில் தீயணைப்புப்படையினர் ஸ்தலத்துக்கு வந்தனராயினும் அவர்கள்மீதும் கற்கள் வீசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. ராஜீவ் காந்தி, திரு. கமலபதி திரிபாதி போன்ற இ. காங்கிரஸ் பிரமுகர்களும் இத் தீ வைப்புச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளனர். (கி)

---

லஞ்சஊழல் மோசடி:

## பங்களாதேஷில் 216

### அரசாங்க ஊழியர்கள் மீதுவிசாரணை!

டாக்கா, மே, 20

லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக பங்களாதேஷில் அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த 216 ஊழியர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் மீதான விசாரணைகளை பங்களாதேஷ் இராணுவ நீதிமன்றம் மேற்கொள்கின்றது. விசாரணை முடிவில் இவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

சில காலங்களுக்கு முன்னர் நிர்வாக சேவையைச் சேர்ந்த 112 பேர் பங்களாதேஷில் ஊழல்களில் ஈடுபட்டதாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இவர்களில் 8 பேர் சிரேஷ்ட அதிகாரிகளாவர்.

பங்களாதேஷின் ஜனாதிபதியாக இருந்து பதவிநீக்கம்செய்யப்பட்ட அப்துல் சத்தாரின் அமைச்சரவையில் அங்கம் வகித்த சுமார் 11 அமைச்சர்களையும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டிருந்தமைக்காக இராணுவ நீதிமன்றம் தண்டித்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. [கி]

சேர்விஸ்ஸிங் மேடைத்தராசுகள்

**Servicing of Platform Weighing Scales**

★ எந்த வகையான மேடைத்தராசுகளையும், சேர்விஸ் செய்தும், முத்திரை பொறுப்பித்தும், பழுதுபார்த்தும் கொடுப்போம்.

★ கடந்த காலத்தில் ஏராளமான மேடைத்தராசுகளை சேர்விஸ் செய்தும், முத்திரை பொறிப்பித்தும் பழுது பார்த்தும் சேவையாற்றியுள்ளோம்.

யூனியன் பௌண்ட்றி அன் என்ஜினியறிங் வேர்க்ஸ்
(UNION FOUNDRY and ENGINEERING WORKS)

சாமுவேல் சன்ஸ் அன் கம். லிமிட்.

இல. 17, செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22199

---

## திருமலை நகரசபைத் தேர்தல் முடிவு

(திருகோணமலை)

திருமலை நகரசபைத் தேர்தல் முடிவு விபரம்:-

ஐ. தே. க 10,940 வாக்குகள்
ஐ தே க 2 542 வாக்குகள்,
ஸ்ரீல. சு. க 2 135 வாக்குகள்,
தமிழ்க் காங்கிரஸ் 106 வாக்குகள்.

தலைவர் திரு இரா. விக்னேஸ்வரன், உபதலைவர்: ஜோக்கிம் இமானுவல்.

கூட்டணி உறுப்பினர்கள்: கே. முத்துக்குமாரசாமி, எஸ். எச் தர்மபால, எஸ் அலிகார் உசனுர், ந. கனகசிங்கம், சி. சச்சிதானந்தவேல், வே சம்பந்தன், கி அபிமன்யுசிங்கம்.

ஐ தே. க உறுப்பினர்: டாக்டர் இ சிவானந்தன், த. மாணிக்கவாசகர்

சுதந்திரக்கட்சி: உறுப்பினர் தயானந்த ஜயவீர. [வி]

---

## ரூப வாஹினியில் இன்று

மாலை:

| | |
|---|---|
| 6-00 | ஆங்கில நிகழ்ச்சி |
| 6-15 | விளையாட்டுப் பயிற்சி |
| 6-30 | முதலுதவிப் பயிற்சி |
| 6-45 | கேலிச்சித்திர நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-15 | விவரணச் சித்திரம் (சிங்களம்) |
| 7-45 | கலந்துரையாடல் |
| 8-15 | செய்தி மஞ்சரி (சிங்களம்) |
| 8-30 | தொலைக்காட்சிநாடகம் (சிங்களம்) |
| 9-00 | 9-வது ஆசியாட் பந்தயங்கள் |
| 9-30 | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 9-45 | 'ஆஜிவாட்' தொடர்ச்சி. |

---

பேராதனைச் சம்பவம்:

## கிராமோதயசபை கண்டனம்

(பண்டத்தரிப்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களும், தமிழ் விரிவுரையாளர்களும் திட்டமிட்டுத் தாக்கப்பட்ட செயலுக்குப் பலத்த கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கட்டுவன் கிராமோதய சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் திரு. நா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஊரங்குணை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சபையின் பொதுக் கூட்டத்தில் இம்மாதம் 8-ம் திகதி யாழ். நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் காரைக் கடத்திச் சென்ற சம்பவத்திற்கும் கண்டனம் தெரிவிக்கும் மற்றொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூளாய் தீவில் விரைவில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சிக் கிளையின் மகாநாட்டிற்குச் சபையின் சார்பில் குழுவொன்றை அனுப்பி வைப்பதென்றும், இம்மாநாடு சிறப்பாக நடைபெற உதவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

### யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் வெளியேறினர்

(அச்சுவேலி)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தினின்றும் வெளியேறினர். கடந்த புதன்கிழமை தனியார் வீடுகளில் வசித்துவந்த மாணவர்களின் உடமைகளும் அவர்களது புத்தகங்களும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதுடன் அவர்கள் இருந்த வீடுகளுக்குச் சேதம் உண்டாக்கப்பட்டது. எங்கும் எடுக்கமுடியாத புத்தகங்களை இழந்த மாணவர்கள் சிலர் கண்ணீர் சிந்தி அழுதனர்.

இச்சம்பவத்தையடுத்து பல மாணவர்கள் விடுதிகளையும், பல்கலைக்கழகத்தையும் விட்டு வெளியேறித் தத்தம் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

---

### யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

இத்தகைய நிகழ்ச்சிகள் எமது நாட்டின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாகப் பல்கலைக் கழகக் கல்வியில் குறையை ஏற்படுத்தாவண்ணமாக நடந்து கொள்ள வேண்டியது பல்கலைக் கழக ஆசிரிய-மாணவ சமுதாயத்தினது பாரிய கடமையாகும் என்றும் இச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

---

### டிரக்- லொறி விபத்து

[யாழ்ப்பாணம்]

இராணுவ டிரக்கும் ஐஸ் லொறி ஒன்றும் மோதிக் கொண்டதில் லொறி பலத்த சேதத்திற்குள்ளானது. இவ்விபத்து மயிலிட்டியில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. (மா-வி)



ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
M.G.R —சரோஜாதேவி
தாயைக்காத்த தனயன்
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30 630,
இரவு 9-30
நாகேஷ் விஜயலதா
ஹலோ பாட்னர்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்) 21-5-83 முதல்
கமலஹாசன் ரதி உல்லாசப்பறவைகள்
வெகு விரைவில் சகலகலா வல்லவன்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன் - வசந்தா
வி. கே. ராமசாமி
ஆலயம்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 5 காட்சிகள்
AMERICAN GIGOLA
23-5-83 முதல்
சம்பூர்ண ராமாயணம்

ஸ்ரீதர்
(யாழ். நகர்)
தினசரி 10.30, 2.00, 4.30, 7,00 9.30
Walt Disney's
HERBIE GOES BANANAS
(Family Entertainment)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி — (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30, 9.45
2-வது வாரம்
தியாகம்
சிவாஜி லட்சுமி
மேஜர் தேங்காய்
நாகேஷ் மனோரமா
ஈஸ்ட்மென்கலர் வி. கே. ராமசாமி

வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்)
A soldier of fortune and his trained assistants rescue a girl held captive in a Remote Island.
Action packed Karate Film
FORCE FIVE
(Adults Only)
From the theme that gave you "ENTER THE DRAGON" and "BATTLE CREEK BRAWL"


# கடத்தல் பொருட்கள்? விசாரணை ஒத்திவைப்பு

(சுண்டிக்குளி)

கலட்டி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான பப்பாசி, சொரியன் பொலிஸ்டர் துணி வகைகளை யாழ் சுங்கத்தடுப்பு அதிகாரி திரு. ஜே. வீரசேகரா தலைமையில் சென்ற கோஷ்டியினர் கைப்பற்றினர்.

இது சம்பந்தமாக அவ்வீட்டு உரிமையாளரையும் விசாரணையில் பொருட்களின் உரிமையாளர் தமது வீட்டில் இவற்றை வைத்ததாகவும் அதனுள் தான் அதற்குப்பொறுப்பல்லவெனவும் பொருட்களின் உரிமையாளரைத்தான் விசாரணைக்கு அழைத்து வருவதாகவும் கூறியதைதயடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## வல்வையில்

வல்வெட்டித்துறையிலுள்ள வீடொன்றில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த 'லிப்ட்' முதலான சட்டைகளின் உதிரிப்பாகங்களை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைப்பற்றி யாழ். சுங்கப்பகுதியில் ஒப்படைத்துள்ளனர்.

யாழ். பதில் சுங்கசேகரிப்பாளர் திரு. சீ. பொன்னையா இது சம்பந்தமாக விசாரணை செய்தபோது வீட்டு உரிமையாளர் இவற்றின் ரசீதுகளைச் சமர்ப்பிப்பதாகக் கூறியதை அடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

அளவெட்டி சைவ வாலிபர் சங்க 65ம் ஆண்டு நிறைவு விழா அளவெட்டி கும்பிளாவளைப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சமயம் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக தெரிவாகினர்.

காப்பாளர் திரு செ. மயில்வாகனம் தலைவர் திரு வை. க சிற்றம்பலம், உபதலைவர்கள் திரு ச. நாகநாதன், திரு. ச. அப்பாத்துரை. செயலாளர்கள் மு. செல்லையா, திரு வை. செல்லையா, பொருளாளர் திரு. வை. கந்தையா.

9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.


வெலிங்டன்? (மானிப்பாய்)
தினசரி- 4-10 7-00
சனி. ஞாயிறு 1-30
அரசிளங்குமரி


# வெளிநாட்டு உதவியுடன் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கக் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

சங்கானை கிழக்குப் பகுதியில் நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக வெளிநாட்டு உதவியைப் பெற்று குழாய்நீர் விநியோகம் செய்ய நடவடிக்கைமேற்கொள்ளுமாறு வட்டுக்கோட்டை எம். பி கலாநிதி நீலன் திருச்செல்வத்தைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்று சங்கானை கிழக்கு கிராமோதய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் திரு. சி. நாகராசா தலைமையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராமோதய சபைப் பகுதியில் கல்வி, சுகாதாரம், மின்சாரம் கைத்தொழில் ஆகிய துறைகளின் பிரச்சினைகளை கவனிக்க தனித்தனியாக உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

சங்கானை சிவப்பிரகாசமகா வித்தியாலயத்தில் அரைகுறையாக இருக்கும் மாடிக்கட்டிட வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நிதிஒதுக்கீடு செய்து தருமாறு வட்டுக்கோட்டை எம். பியை கோருவது என்ற மற்றொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

# திட்டிகொலைச் சம்பவம்: சந்தேகநபர்கள் மூவரும் றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

குருநகர் திட்டி கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான சீமான் துரைமணி, சீமான் சபாராஜா அந்தோனி செய்சா ஆகியோர் யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் ஜிம்மி ராசரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

திட்டியில் இம்மாதம் 6-ம் தேதி பீச்றோட்டைச் சேர்ந்த செல்வம் அரியராசா அல்லது ஆசைமணியை வாளால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டது தொடர்பாகச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் சிரேஷ்டசட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சட்டத்தரணி ரி. விமலராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர்.

இம்மாதம் 30-ம் தேதி வரை சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்க பதில் நீதவான் பணித்தார். (மா-அ)

# ச. ச. நிலைய நிர்வாகிகள்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருடநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போஷகர் அ. சின்னராசா, தலைவர்: க. குலசிங்கம் செயலாளர் க. சக்திவேல் பொருளாளர் வ. சிவசுப்பிரமணியம், 5பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# சாவகச்சேரியில் குண்டு வெடிப்பு

(மட்டுவில்)

தேர்தலன்று அதிகாலை சாவகச்சேரி நகரசபைத் தேர்தலுக்கான 4ம் வட்டார தேர்தல் சாவடி அமைந்துள்ள கல்வயல் சண்முகானந்த வித்தியாலயத்தில் ஒரு குண்டு வெடித்தது. உடனடியாகவே ஆயுதப்படையினர் அங்கு விரைந்துவந்து வெடிக்காமல் கிடந்த ஒருகுண்டைக் கைப்பற்றினர்.

அக்குண்டு சிறிது நேரத்தின் பின்னர் வெடித்த போதிலும் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை. குண்டு வெடிப்பை யடுத்து அங்கு மயான அமைதி நிலவியது. வாக்களிக்க எவரும் போவதைக் காண முடியவில்லை.

# மல்லாகம் இ. அ. சங்க சமயப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க சமய வளர்ச்சி, கலை, கலாச்சாரக்கழகத்தால் 14-ம், 15-ம் திகதிகளில் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட சமயப்போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரம் வருமாறு:-

தேவாரம்; கீழ்ப்பிரிவு:-செல்விகள் கல்பனா இரங்கநாதன், அன்பரசி இராதாகிருஷ்ணன், கேதா செகராசசிங்கம்.

கீழ்ப்பிரிவு: செல்விகள் கௌதமி விஜயரட்ணம், சுகி கனகலிங்கம், சுகந்தினி பொன்னுத்துரை.

மத்தியபிரிவு: செல்விகள் மதனரஞ்சனி இராசரத்தினம், ஜெயந்தினி விக்னேஸ்வரன். சகுந்தலை சின்னத்தம்பி.

சபிதையத்திற்குரிய தேவாரம் செல்விகள் கல்பனா இரங்கநாதன், கேதா செகராசசிங்கம், அன்பரசி இராதாகிருஷ்ணன்

கீழ்ப்பிரிவு: செல்விகள் கௌதமி விஜயரட்ணம், சுசி கனகலிங்கம்.

பேச்சு கீழ்ப்பிரிவு; செல்விகள் பகீதா பஞ்சலிங்கம், பவானி சுப்பிரமணியம், நாகேந்திரன் கந்தசாமி

மத்தியபிரிவு: செல்வன் உமாசந்திரன் முத்தையா, செல்விகள் தயானகௌரி பொன்னுத்துரை, சாந்தா பாலசுப்பிரமணியம்.

மேற்பிரிவு; செல்வி தமிழ்த்தா பாலசுப்பிரமணியம். (மா.க)

# வட்டு. கிழக்கு கிராமோதயசபை முதலிடம்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறந்த கிராமோதயசபையாகவட்டுகிழக்கு கிராமோதயசபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர்பிரிவுமட்டத்தில் சிறந்த கிராமோதயசபையை தெரிவுசெய்யும் போட்டி அண்மையில் நடைபெற்றது. யாழ். அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று கடந்தவாரம் இங்கு வருகைதந்து வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில்வைத்து கிராமோதயசபைகளின் செயல்திட்டங்களையும் அவை ஆற்றிய பணிகளையும் நேரடியாக ஆராய்ந்த பின்பு வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதயசபை முதலிடம் பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது. (வ)


காட்சிகள் வழமைபோல் நடைபெறும்



கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
றீகல்
10-30 மணி காட்சிக்கு பெண்களுக்கு விசேட வசதி செய்து கொடுக்கப்படும்.
'நடிகர் திலகம்'
சிவாஜி கணேசன்
புதுமுகமாக அறிமுகமாகும் சிவாஜி வாரிசு
'பிரபு
சுந்தரராஜன்
ஸ்ரீப்பிரியா
சுமித்திரா
மனோரமா
நடிக்கும்
சங்கிலி
(ஈஸ்ட்மென் கலர்)

# தமிழ் பகுதியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தலைமைக்காரியாலயம், யாழ். எம்.பி.யின் இல்லம், 'ஈழநாடு' பத்திரிகைக்காரியாலயம் இறுதியில் யாழ் பொது நூலகம் உட்பட யாழ்ப்பாணத்தின் அரைவாசிப் பகுதியை பொலிசார் எரித்து சாம்பராக்கினர்.

இத்தீயிடல் சம்பவத்துக்கும், அப்போது நடந்த கொலைகளுக்கும் அரசு பொறுப்பேற்றுக்கொண்டு நஷ்டஈடு வழங்க முன்வந்தது.

அப்போது யாழ்ப்பாணப் பகுதியில் சிங்களப் பொலிசாரை மாற்றி பெரும்பான்மையான தமிழ்ப்பொலிசாரை நியமிக்கவும் இராணுவ வீரர்களை முகாம்களுக்குத் திருப்பவும் அரசு ஏற்றுக்கொண்டது.

## அட்டூழியங்கள் தொடர்கின்றன

பொலிஸ் தரப்பில் மாற்றம் செய்யப்பட்டதை அடுத்து பொலிசாருக்கு எதிரானபுகார்கள் அநேகமாக முற்றுப்பெற்றன. ஆனால் காவலில் உள்ள இளைஞர்களுக்கெதிராகவும் இராணுவத்தினர் செய்துவரும் அட்டூழியங்கள் வடபகுதியில் தொற்றுநோய்போல் ஆகிவிட்டது. இத்தருணத்திலேயே யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற மாநகர சபைத் தேர்தலின்போதும் நடைபெற்றது.

இத்தேர்தலைப்பகிஷ்கரிக்கும்படி சில அரசியல் பிரிவினர் கோரிக்கை விடுத்திருந்ததும் எமது கட்டங்களிலும் வேட்பாளர்களுக்கெதிராக வன்செயல்களும் நடைபெற்றது பகிரங்கம். இத்தேர்தல் நடைபெற்ற சூழ்நிலை இதுதான்.

அர்த்தமற்ற செயல்களையும் அழிவுகளையும் கொண்ட இந்தக் கொள்கையை முற்றாக நாம் நிராகரித்துள்ளோம் என்பதை எவரும் சந்தேகிக்க முடியாது.

கந்தர்மடம் வாக்களிப்பு நிலையத்தில் காவலுக்கிருந்த இராணுவம் பொலிசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இதில் ஒரு இராணுவவீரர் கொலைப்பட்டார். ஆளைஞர் கோஷ்டியொன்றே இத்துப்பாக்கிச் சூட்டை நடாத்தி விட்டு ஓடிமறைந்து விட்டார்கள் என்பதும் சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் ஒன்றுமறியாத அப்பாவிகள் என்பதும் இராணுவ அதிகாரிகளுக்கு நன்கு தெரியும்.

## அப்பாவிகள் பலி

இராணுவத்தினரின் வன்செயலுக்கும் தீவைப்புக்கும் இந்த அப்பாவி மக்களே பலியாகியுள்ளனர். 150 க்கும் மேற்பட்ட வீடுகள் பலமினி பஸ்கள், கார்கள், சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள், தொலைக்காட்சி - வானொலிப் பெட்டிகள் வீட்டுத்தளபாடங்கள் உடுபிடவைகள் உணவு சாமான்கள் யாவும் எரிக்கப்பட்டன. அடித்து நொறுக்கப்பட்டன. இந்த வீடுகளிலிருந்து பணம், நகை மற்றும் நகைகள் பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன.

இந்த நிலையில் இராணுவத்தினருக்கு பொதுமக்கள் கடமைப்பட்டவர்களாகவும், ஒத்துழைப்பு அளிக்கவேண்டியவர்களாகவும் இருக்கவேண்டுமென இராணுவ வீரர்கள் எதிர்பார்க்கிறார்களா?

## இனவெறிச்செயல்கள்

யாழ்ப்பாணத்தில் பெற்றோல்நிலையங்கள், கடைகள் அடித்து நொறுக்கப்பட்டதும் வாகனங்களில் பிரயாணம் செய்த மக்கள் மயிலிட்டி போன்ற தூர இடங்களில் தாக்கப்பட்டிருப்பதும், இனவெறிச் செயல்களே.

இது மக்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கவேசெய்திருக்கும்.

வியட்னாமில் அமெரிக்கா நடத்திக்கொண்டது போல் இங்கு செயல்படும் ஒரு ஆக்கிரமிப்பு ராணுவத்தின்மூலம் தமிழ் மக்களை ஆட்சிபுரியும் அரசாங்கத்தின் கொள்கையை முற்றாக சீர்தூக்கிப்பார்க்கவும், முழுப்பிரச்னைக்கும் அரசியல் தீர்வுகாணவும் அவசியமான ஒருகட்டம் உருவாகிவிட்டது. தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் தொடர்ந்தும் இருப்பதானது மக்களின் உணர்ச்சிகளை மேலும் அதிகரிக்கச் செய்யும். இப்பகுதியிலிருந்து இராணுவம் எவ்வளவு விரைவாக வாபஸ் பெறப்படுகின்றதோ அவ்வளவு தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நன்மையாக முடியும். (மா)

# மூன்றுஇடங்களில் யூ.என்.பி. வெற்றி

(கொழும்பு)

நேற்று நடந்த நான்கு நகர சபைத்தேர்தல்களில் அம்பாந்தோட்டை அம்பலாங்கொடை களுத்துறை ஆகியவற்றில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. தங்காலை நகர சபைத்தேர்தலில் சுயேச்சைக்குழு வெற்றிபெற்றுள்ளது.

## பதட்டநிலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
தவிர்க்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாணவர்களை அழைத்து பதட்ட நிலையை ஏற்படுத்தாது அமைதியாக நடந்து கொள்ளுமாறுகேட்டுக்கொண்டார்.

இத்தகைய சம்பவங்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் எச்சரிக்கைசெய்தார் என்றும் தெரிகிறது.

## கந்தர்மடம்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
சக்கொப்பிகள் சமையல் பாத்திரங்கள், உடுபுடவைகள் தான் அத்தியாவசியமானவைகளாக தென்படுகின்றன.

பொதுமக்கள் - வர்த்தகப் பிரமுகர்கள் தொழில் அதிபர்கள் மேற்படி கந்தர்மடம் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு தாராளமாக அள்ளி அள்ளி வழங்கலாம்.

காசோலைகள், காசுக்கட்டளைகள் மூலம் நிதி அனுப்புபவர்கள் 'கந்தர்மடம் அகதிகள் புனர்வாழ்வு நிதி; யாழ். லயன்ஸ் கழகம்-மே/பா. ஈழநாடு லிமிடெட், த. பெ. எண். 49-யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்

அப்பியாசக் கொப்பிகள். சமையல் பாத்திரங்கள். உடுபுடவைகள் கொடுத்தவுவோர் பின்வரும் இடங்களில் அவற்றைக் கொடுக்கலாம்.

(1) லயன் எம். ரி. நவரத்தினம், மலையன் றேடியோ சேவிஸ், 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2) லயன் எஸ். அற்புதானந்தா, கொமேர்சல் பிறின்டேர்ஸ் அண்ட்ரேட்ஸ், 17, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

(3) லயன் விக்ரர் இமானுவல். விக்ரர் அன் சன்ஸ், 100 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (மா)

# ராணுவத்தைக் கண்டேன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

18-5-83ல் பகல் 2 மணி போல் காலஞ்சென்றவரும் மற்றும் ஏழு பேரும் கஜுரினா பீச்சில் குளிக்க வானொன்றில் சென்றோம். அங்குகூழ்குடித்துவிட்டு குளித்தோம். கடலுக்குள் ஏதோ ஒரு கூர்மையான வஸ்து எனது தோளில் வெட்டியதால் வந்தவானில்மூளாய் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். மருந்துகட்டிக் கொண்டு வெளியில் வரும்பொழுது எங்களில் வந்த 3 பேருடன் வான் சென்றுவிட்டது.

நாங்கள் கந்தசாமி முத்துலிங்கம் என்பவரின் காரைப் பிடித்துக்கொண்டு 5 பேரும் காரைநகரிலுள்ள எமது வீடு நோக்கிப் போகும்பொழுது பொன்னாலைச் சந்தியில் கடற்படையினர் காரைமறித்து சோதனைசெய்தனர். காயம் எப்படி வந்ததென்று கேட்ட பொழுது கடற்கரையில் கண்ணாடி வெட்டியதால் மூளாய் ஆஸ்பத்திரியில் மருந்து கட்டி வந்த ஆஸ்பத்திரி றிசீட்டையும் காட்டினோம். இதனைத் தொடர்ந்து ஒருபுறத்தில் எமது வாகனத்தை நிறுத்தும்படி சொல்லிவிட்டு மற்றைய வாகனங்களைச் சோதனைசெய்தார்கள்.

பின்னர் 8-30 மணிபோல் கடற்படை ஜீப் வண்டி முன் செல்ல எமது காரை தொடர்ந்து வரச்சொல்லிக்கொண்டு சென்றுகொண்டிருந்த போது எங்களைமுன்னாலவிட்டுச்சென்ற வானும் வந்தது. அதைத் தொடர்ந்து கடற்படை ஜீப்பும் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தது இரவு 8-45 மணியளவில் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக வந்து கொண்டிருந்தோம் றோட்டின் வலது பக்கத்தில் சுமார் 50பேர் துப்பாக்கி ஏந்தியபடி நின்றார்கள். அப்போது துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. நான் தலை குனிந்துவிட்டேன். தொடர்ந்து கார் உடனே மணிக்கூட்டு கோபுர வீதிவழியாகத் திரும்பியது.

அப்பொழுதுகார்சாரதி முத்துலிங்கம் தனது வலதுதோளில் சூட்டுக் காயத்தால் இரத்தம் வழிகிறது என்றுசொல்லிக் காரை ஓட்டிக்கொண்டிருந்தார். பின் சீட்டில் நவரத்தினம், காலஞ்சென்ற சுறீஸ்கந்தராஜா, நேருலிங்கம், தேவராசா ஆகியோர் இருந்தனர். அப்பொழுது காலஞ்சென்றவர் கழுத்துச் சரிந்தபடி சாய்ந்தார். அவரது தலையிலிருந்து இரத்தம் வழிகிறது என்று நேருலிங்கம் சொன்னார்.

கார் குருநகர் இராணுவ முகாம் அடைந்து விட்டது. அங்கே சாரதியையும் காலஞ்சென்றவரையும் தவிர மற்றவர்களை இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர் பொலிசார் விசாரணை செய்தார்கள். நேற்று முன்தினம் 19-ம் திகதி காலை வாக்கு மூலம் பெறப்பட்டது. பின்னர் 3-30க்கு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு இராணுவத்தினரும் பொலிசாரும் அழைத்து வந்து காட்டிய பின்னரே அவர் இறந்துவிட்டார் என அறிந்தேன். அவருக்கு எப்படி தலையில் காயம் ஏற்பட்டதென சொல்ல முடியாது.

பொன்னாலை சந்தியில் எதுவித காயமுமின்றி அறிவுடன் தான் அவர் இருந்தார் என்றார்.

பதில் நீதவான் திரு. க. கேசவன் இம்மாதம் 26-ம் திகதி வைத்திய பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கும் படி தெரிவித்து விசாரணையை ஒத்திவைத்தார். (மா)

## காருக்குத் தீ!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள புதூர் என்ற இடத்தில் காரொன்று மறிக்கப்பட்டு இனந்தெரியாதவர்களால் கொளுத்தப்பட்டது! கார்ச்சாரதியுடன் ஏ. தவராசா என்பவர் இக்காரில் இருந்தார். நேற்றிரவு 7-30 மணிக்கு இச்சம்பவம் நடந்துள்ளது. மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொடித்துவக்கு விசாரணைகளை மேற்கொள்கிறார்.

# சீருடை ஆசாமிகள் பொதுமக்கள்மீது தாக்குதல்!

(அச்சுவேலி)

அச்சுவேலியில் மூன்று 'ட்றக்'குகளில் வந்தவர்கள் அட்டகாசம் புரிந்துள்ளனர். வசாவிளான் பகுதியிலிருந்து அச்சுவேலியூடாக யாழ்ப்பாணம் நோக்கிச்சென்ற ட்றக்குகளில் வந்த சீருடையணிந்தவர்கள் பாதையால் சென்றவர்களுக்கும் வாகனங்களுக்கும் கல்விசி சேதம் விளைவித்தனர். அச்சுவேலி வசாவிளான் வீதியில் வசாவிளானை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளை நோக்கி மோதுவதுபோல் ட்றக் ஒன்று வரவே மோட்டார் சைக்கிளில் வந்தவர் பக்கத்தேயுள்ள மதில் ஒன்றில் மோதி பலத்த காயங்களுக்குள்ளானார்.

அச்சுவேலியில் இராசா அச்சகத்துக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த மேற்படி அச்சக உரிமையாளரின் மோட்டார்சைக்கிள் ஒன்றிற்கு கல் வீசப்பட்டதால் மோட்டார் சைக்கிளின் விளக்காட்டி நொருங்கியதுடன் சைக்கிளும் நிலத்தில் விழுந்தது. அச்சுவேலியிலுள்ள 'தங்கம் சுப்ப ட்றக்கல்' மருந்துக் கடைக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உரிமையாளர்களின் 'மினிபஸ்' ஒன்றுக்கும் கல்வீசப்பட்டு பலத்த சேதமேற்பட்டுள்ளது. அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ள வீதியோரமாகவுள்ள வீட்டுக்கு ஒரு எறிந்தகல் வயோதிபமாது ஒருவரின் காலில் பட்டு அதிர்ஷ்டவசமாக சிறிய காயங்களுடன் உயிர் தப்பினார். ஆவரங்கால் சந்தியில் தமது 'ட்றக்கை' நிறுத்தி வைத்து வாகனங்களைத் திசை திருப்பிவிட்ட சீருடையில் வந்தவர்கள் சைக்கிளில் வந்தவர்களையும் தாக்கியுள்ளனர்.

புத்தூருக்கண்மையில் வேகமாகச்சென்ற ட்ரக்கில் தடியொன்றைக் குறுக்காக ஓங்கி வாலிபர் ஒருவருக்கு அடிக்கும்போது வாலிபர் குனிந்துவிடவே வயோதிபர் ஒருவருக்கு அத்தடி காலில் பட்டு கால் வெடித்து பலத்த காயங்குள்ளானார். இவ்வாறான சம்பவங்கள்தொடர்ந்து நடைபெறுது தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி அச்சுவேலி கிராமோதய சபைத்தலைவர் திரு. திரு. க. இராசதுரை அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

## பருத்தித்துறை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பாடசாலை மாணவர்களும் மாணவிகளும் ஒழுங்கைகளுடாக ஓடிமறைந்தனர். அங்குநின்ற கார்கள், வான்கள் மின்னல் வேகத்தில் எந்தத் திசையென்று தெரியாது மறைந்தன.

கடைகள் சில நிமிட நேரங்களுக்குள்ளேயே பூட்டப்பட்டன. சந்தை கலைந்தது இதனை அடுத்து பருத்தித்துறை பகுதி வெறிச்சோடி மயான அமைதி நிலவியது.

## யாழ். நகரில்

யாழ். ஆஸ்பத்திரிக்குப் பின்புறவீதியில் வந்துகொண்டிருந்த சிலரும் சீருடை அணிந்திருந்தவர்களால் நேற்று மாலை தாக்குதலுக்குள்ளானார்கள்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் விக்பிரட் என்பவர் இத்தாக்குதலுக்குள்ளான தால், காயத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து இவ்விதமான தாக்குதல்கள் நடைபெற்றதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### தில்லைநாதன் இராஜநாதன்.

தில்லைநாதன் இராஜநாதன் காலமானார். இவர் பெற்றோலியம் கூட்டுத்தாபன (கிளிநொச்சி) எழுதுவினைஞரும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும், அராலி கடக்கு காலஞ்சென்ற க. தில்லைநாதன், திருமதி தில்லைநாதன் அவர்களது மூத்த மகனும், புவனேஸ்வரி, கனகநாதன், விஸ்வநாதன், தில்லைநாயகி ஆகியோரின் சகோதரனும், இராசரத்தினம் தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-5-83) சனிக்கிழமை காலை பத்துமணிக்கு சேர் பொன் இராமநாதன் வீதி இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். (7304)

## மரண அறிவித்தல்

### சுப்பர் வேலுப்பிள்ளை

(மலாயன் பென்சனியர்)

70 பாங்சால் வீதியை சேர்ந்த திரு. சுப்பர் வேலுப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும் சரோஜினிதேவியின் அன்புத் தந்தையும் விஜயரெட்ணம் (Saudi) இன் மாமனாரும், விமலோஜினி, சுதர்சினி, கிருஷ்ணவேணி, ஜெயதனன் ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21 - 5 - 83 மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: திருமதி பாக்கியம்
திருமதி விஜயரெட்ணம்
7310

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Generai Poat Office Sri Lanka. under nnmber 
ஐ. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.